**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 22-08-2024

SC.32/2023

அ.சா. - 1 பசவராஜ்

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ம் நாள் பசவராஜ் என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திருமதி. சு. ஸ்ரீவித்யா, பி.காம். எம்.ஏ.பி.எல்., சார்பு நதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பசவராஜ் | தந்தை பெயர் | லட்சுமணன் |
| வயது | 60 | கிராமம் | கிருஷ்ணம்மாகொத்தூர் |
| தாலுக்கா | ஓசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

## முதல் விசாரணை

நான் ஓசூரில் வசித்து வருகிறேன். கடந்த 11-07-2021ம் தேதி கிருஷ்ணம்மாகொத்தூரில் எனக்கு சொந்தமான விவசாய நிலம் உள்ளது. அதே தேதியில் காலை 8.30 மணியளவில் நான் டிராக்கடரில் எருவு எடுத்துக் கொண்டு பக்கத்து கொல்லையிலிருந்து என்னுடைய கொல்லைக்கு சென்றுக்கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் ஆஜர் எதிரிகளான அன்னையப்பா, சுரேஷ்பாபு, வெங்கட்டலட்சுமி ஆகிய மூன்று பேரும் மறைவாக நின்றுக்கொண்டு அன்னையப்பா அரிவாளால் (மச்சு) வலது கையில் தோல்பட்டையின் மீது வெட்டிவிட்டார். சுரேஷ்பாபு கடப்பாறையால் என்னுடைய வயிற்றில் குத்தினார் அப்பொழுது நான் கடப்பாறையை தடுத்து பிடித்துக்கொண்டு சிறிது பின்னால் நகர்ந்ததால் கடப்பாறையினுடைய முனை பகுதியின் என்னுடைய வயிற்றின் தோலின் பட்டு சாறுகாயம் ஏற்பட்டது. நான் பின்னால் நகரும்பொழுது வெங்கட்டலட்சுமி கட்டையால் என் முதுகில் அடித்து கெட்ட வார்த்தைகளான தேவடியா பையா இத்தோட செத்து தொலைடா என்று என திட்டிக்கொண்டே அடித்தார். மூன்று பேரும் கெட்டவார்த்தைகளால் திட்டிக்கொண்டே தான் அடித்தார்கள். எங்களுக்குள் எந்த வித முன்விரோதமும் கிடையாது. ஆஜர் எதிரிகளின் சொந்தக்காரருடைய நிலத்தை நான் கிரயம் வாங்கியதிலிருந்தே அவர்கள் என் மீது விரோமாக இருக்கிறார்கள். அடி பலமாக பட்டதால் நான் கூச்சல போட்டேன். அப்பொழுது என்னுடைய தம்பியும் மற்றொரு தம்பியினுடைய மகனும் ஓடி வந்து சுரேஷ்பாபு கையில் இருந்த கடப்பாறையை என் தம்பி மல்லையா பிடித்துக்கொண்டார். சசி தடுக்க வந்தபொழுது அன்னையப்பா மச்சுவால் சசியின் இடது கையில் வெட்டிவிட்டார். அதில் சசியினுடைய கை ஒடிந்துவிட்டது. வெங்கட்டலட்சுமி சசியின் தலையில் கட்டையால் அடித்ததில் அவருடைய மண்டை உடைந்து இரத்த காயம் ஏற்பட்டுவிட்டது. அப்பொழுது அக்கம் பக்கத்தினர் ஓடிவந்தார்கள், ஆஜர் எதிரிகள் மூவரும் என்னைக்கிருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிக்கொண்டே ஓடிவிட்டார்கள். அதன் பிறகு மல்லையா, பாலாஜி

ஆகிய இருவரும் என்னையும் சசியையும் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். என்னை ஓசூர் அரசு மருத்துவமனைக்கும், சசியை சூளகிரி மருத்துவமனையா அல்லது வேறு மருத்துவமனையா என்று ஞாபகமில்லை, ஒரு தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். ஓசூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்ற பிறகு இங்கே முடியாது என்று கூறிவிட்டதால் மேல் சிகிச்சைக்காக குணம் மருத்துவமனைக்கு ஒரு நாள் சிகிச்சைக்கு சேர்ந்தேன். பின்னிட்டு லட்சுமி மருத்துவமனையில் 5 நாட்கள் சிகிச்சை பெற்றேன். சம்பவம் நடந்த அன்று காலை சுமார் 10.00 மணியளவில் குணம் மருத்துவமனைக்கு உத்தனப்பள்ளி காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துக்கொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றார். என்னிடம் காண்பிக்கப்படுகின்ற புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. தற்பொழுது நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ள அறிவாள் தான் சம்பவ தேதியில் அன்னையா என்னை வெட்ட பயன்படுத்திய அறிவாள் ஆகும். அது **சா.பொ.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. நீதிமன்றத்தில் உள்ள இதே கடப்பாறையால் தான் சுரேஷ்பாபு என்னை குத்தினார் அந்த கடப்பாறை **சா.பொ.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் உள்ள கட்டையால் தான் வெங்கடலட்சுமி என்னை அடித்தார். அந்த கட்டை **சா.பொ.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

R SRIVIDYA — Digitally signed by R SRIVIDYA Date: 2024.08.22 13:40:29 +0530